தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
27.6.2024 (வியாழக்கிழமை)

# ஜிப்மரில் மருத்துவ மாணவர்கள் மாநாடு

## 3 நாட்கள் நடக்கிறது

புதுச்சேரி, ஜூன்.27-
ஜிப்மரில் 6-வது சர்வதேச இளநிலை மருத்துவ மாநாடு நாளை (வெள்ளிக்கிழமை) தொடங்கி 30-ந்தேதி வரை நடக்கிறது. இந்த மாநாட்டில் மருத்துவ மாணவர்கள் ஆராய்ச்சி மற்றும் கல்வி தொடர்பான பல்வேறு போட்டிகளில் பங்கேற்கிறார்கள்.

மருத்துவ ஆராய்ச்சியாளர்கள், சமூக சுகாதார வல்லுனர்கள் மற்றும் மருத்துவ தொழில்நுட்ப வல்லுனர்கள் மூலம் நடத்தப்பட்டு கல்வி மற்றும் அறிவியல் சார்ந்த கருத்து பரிமாற்றத்தை மாணவர்களிடையே ஊக்குவிப்பது இந்த மாநாட்டின் நோக்கமாகும். பயிற்சிகள் மற்றும் விளக்கக்காட்சிகள் மூலம் மருத்துவ திறன்களை மேம்படுத்துவதற்கான ஒரு தளமாகவும் செயல்படும். இந்த ஆண்டு ஆராய்ச்சி, மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் சமூக ஆரோக்கியத்தில் மருத்துவம் போன்றவற்றை மையமாக கொண்டு மாநாடு நடத்தப்படுகிறது.

நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்
புதுச்சேரி Puducherry 26.6.2024 புதன்கிழமை Wednesday Volume : 19 Issue:144 PAGE 6 Rs:7 குரோதி ஆண்டு ஆனி 12ஆம் தேதி

# ஜிப்மரில் 6-வது சர்வதேச இளங்கலை மருத்துவ மாநாடு: 28-ந்தேதி தொடங்குகிறது

புதுச்சேரி, ஜூன் 26-

புதுவை ஜிப்மரில் 6-வது சர்வதேச இளங்கலை மருத்துவ மாநாடு வருகிற 28-ந்தேதி தொடங்கி 3 நாட்கள் நடக்கிறது.

மாநாட்டில் நாடு முழுவதும் இருந்து 1,500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆராய்ச்சி, கல்வி தொடர்பான பல்வேறு போட்டிகளில் பங்கேற்கின்றனர். மாநாடு, மருத்துவ ஆராய்ச்சியாளர்கள், சமூக சுகாதார வல்லுநர்கள், மருத்துவ தொழில்நுட்ப வல்லுர்கள் மூலம் வழிநடத்தப்படுகிறது. கல்வி, அறிவியல் சார்ந்த கருத்து பரிமாற்றத்தை மாணவர்களிடையே ஊக்கவிக்கும் நோக்கில் மாநாடு நடத்தப்படுகிறது. நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கு ஜிப்மரின் அனுபவ மிக்க பேராசிரியர்களை கொண்டு பயிற்சியுடன் விளக்க காட்சிகளும் நடத்தப்படுகிறது. ஆராய்சசி, மருத்துவ தொழில்நுட்பம், சமூக ஆரோக்கியத்தில் மருத்துவம் என்ற கருப்பொருளை மையமாக வைத்து மாநாடு நடத்தப்படுகிறது.